கல்முனை மாநகர சபை

அம்பாறை மாவட்டம்

---

1 நிதிக்கூற்றுகள்

---

1.1 நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்தல்

---

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2014 செப்தம்பர் 09 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2013 ஆகஸ்ட் 05 ஆந் திகதியும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2014 திசெம்பர் 29 இல் சபையின் தவிசாளருற்கு வழங்கப்பட்டது.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

---

இந்த அறிக்கையில் 1.3 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட தாக்கத்தினைத் தவிர்த்து கல்முனை மாநகர சபையின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.3 நிதிக்கூற்றுக்களின் மீதான கருத்துரைகள்

---

1.3.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்குதல்

---

உள்ளூராட்சி மாகாண சபைகள் அமைச்சு செயலாளரின் 2014 சனவரி 27 ஆம் திகதிய பீஎல்/05/பீஏ/எஸ்எவ்பீஎஸ்ஏஎஸ் ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களைப் பின்பற்றி நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

1.3.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

---

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டிற்காகச் செலுத்தவேண்டிய ரூபா 11,500 தொகையான கணக்காய்வுக் கட்டணத்திற்காக கணக்குகளில் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) பேரேடுகளின்படி மீளாய்வாண்டின் இறுதியில் மீளளிக்கப்படக்கூடிய வைப்புக்களின் பெறுமதி ரூபா 18,078,640 தொகையாகக் காணப்பட்டிருந்த போதிலும் சபையால் சமர்ப்பிக்கப்பட்ட மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்களில் மேற்படி வைப்பானது ரூபா24,554,249 எனக்காட்டப்பட்டதால் மீளளிக்கப்படக்கூடிய வைப்புக்கள் ரூபா.6,475,609 தொகையால் அதிகரித்துக் கணக்கிடப்பட்டுள்ளது.

(இ) மீளாய்வாண்டில் சபையால் பொறித்தொகுதியும் இயந்திரமும், அலுவலக உபகரணங்கள் மற்றும் தளபாடங்களும் பெருத்துக்களும், முறையே ரூபா 3,432,130, ரூபா.5,444,300 மற்றும் ரூபா 1,641,340 தொகைக்கு கொள்வனவு செய்யப்பட்ட போதிலும் நிதிக் கூற்றுக்களில் அவற்றின் கொள்வனவுப் பெறுமதி முறையே ரூபா 29,304,324, ரூபா 6,341,312, மற்றும் ரூபா 1,728,410 எனக் காட்டப்பட்டிருந்ததனால் ரூபா 26,856,276 கூட்டுமொத்த தொகையால் சொத்துக்கள் அதிகரித்துக் கணக்கிடப்பட்டுள்ளது.

(ஈ) பேரேட்டின்படி மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறான அரச ஊழியர் முற்பணக் கணக்கு நிலுவை ரூபா 7,301,700 தொகையாக காட்டப்பட்டபோதிலும் நிதிக் கூற்றுக்களில் ரூபா 8,632,563 தொகை எனக் காட்டப்பட்டுள்ளதால் அரச ஊழியர் முற்பணக்கணக்கு நிலுவை ரூபா 1,330,863 தெகையால் அதிகரித்துக் காட்டப்பட்டுள்ளது.

1.3.3 ஆவணச் சான்றுகள் இன்மை

நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட பின்வரும் ஒவ்வொரு விடயத்திற்கும் எதிரே சுட்டிக்காட்டப்பட்டுள்ள சான்றுகள் கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

| விடயங்கள் | தொகை | சான்றுகளின்மை |
|---|---|---|
| காணிகட்டிடம் | 89,430,210 | காணி கட்டிட பதிவேடு |
| பொறித்தொகுதியும் இயந்திரமும் | 26,364,290 | நிலையான சொத்துக்கள் பதிவேடு மற்றும் மெய்மைய்வுச் சபை அறிக்கைகள் |
| தளபாடங்களும் பொருத்துக்களும் | 1,623,540 | |
| அலுவலக உபகரணங்கள் | 1,586,984 | |

1.3.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மை

கீழே காட்டப்பட்டுள்ள சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் பகுப்பாய்வு செய்து கீழே தரப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணக்கமின்மை |
|---|---|
| (அ) பிஎப்/437 ஆம் இலக்க பொது நிதி சுற்றறிக்கை | வாகனங்களின் காப்புறுதி தேசிய காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திடமிருந்து அல்லது வரையறுக்கப்பட்ட இலங்கைக் காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திடமிருந்து மாத்திரமே பெற்றுக்கொள்ள வேண்டிய போதிலும் இதற்கு முரணாக வாகனத்துக்கான காப்புறுதி பத்திரமானது தனியார் காப்புறுதி நிறுவனத்திடமிருந்து ரூபா. 66,820 தொகை செலுத்தி பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. |

| | | |
|---|---|---|
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் தாபன விதிக் கோவை அத்தியாயம் XXV111 பிரிவு 1.3 | ஏற்பாடுகளின் பிரகாரம் சகல உத்தியோகத்தர்களும் தமது வரவினை உறுதிப்படுத்தும் பொருட்டு வரவுப் பதிவேட்டில் கையொப்பமிட வேண்டிய போதிலும் சபையில் பணியாற்றிய பதவி நிலை உத்தியோகத்தர் ஒருவர் கையொப்பமிட்டு தனது வரவினை பதிவு செய்யாது 3 வருடங்களாக சம்பளம் மற்றும் அனைத்து படிகளும் உள்ளடங்கலாக ரூபா1,282,487 மொத்தத் தொகையை பெற்றுள்ளார். |
| (இ) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதி ஒழுங்கு விதி இலக்கம் 396 (டி) | வழங்கப்பட்டு ஆறு மாதங்களுக்கு மேலாக மாற்றப்படாத ரூபா 9,580 கூட்டுமொத்த தொகையான 04 காசோலைகள் தொடர்பாக உரிய ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

1.3.5 அதிகாரமற்ற கெடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) சபையின் அங்கீகாரமின்றி அக்கரைப்பற்றிலுள்ள பத்திரிகையாளர் சம்மேளனத்திற்கு கணனி கொள்வனவுக்காக ரூபா 58,000 தொகையும், மருதமுனை அல்மனார் மத்திய கல்லூரிக்கு கட்டிட நிர்மானத்திற்கு ரூபா 98,010 தொகையும் செலவு செய்யப்பட்டுள்ளது.

(ஆ) மாநகர சபை எல்லைக்குள் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு விளையாட்டு உபகரணங்கள் வழங்கும் நோக்குடன் மீளாய்வாண்டில் ரூபா 2,000,000 தொகை பாதீடு செய்யப்பட்ட போதிலும், அவ்நோக்கத்திற்காக ரூபா 2,240,269 செலவு செய்யப்பட்டுள்ளமையால் மேலதிகமாக செலவு செய்யப்பட்ட ரூபா 240,269 தொகைக்கு சபையின் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை.

2. நிதி மீளாய்வு

2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின்படி 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான மீண்டுவரும் செலவினத்திலும் கூடிய வருமானம் ரூபா 2,190,353 ஆகும். இதனோடொத்த முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவினத்திலும் கூடிய வருமானம் ரூபா 9,413,149 ஆக இருந்தமை நிதி விளைவுகளில் ரூபா 7,222,796 பின்னடைவைக் காட்டுகின்றது.

2.2 வருமான முகாமைத்துவம்
------------------------------------------

2.2.1 முத்திரைக் கட்டணங்கள்
------------------------------------------

2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்கவேண்டிய முத்திரைக் கட்டணம் ரூபா2,518,644 தெகையை பதிவாளர் நாயகத்திடமிருந்து பெறுவதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

2.2.2 ஏனைய வருமானம்
-------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) வருமானங்களை அறவிடுவது தொடர்பான உபவிதிகளை சட்டமாக்கத் தவறியதன் காரணமாக சபையின் அதிகாரத்திற்குட்பட்ட இடங்களில் தனியார் தொலைத்தொடர்பு நிறுவனங்களால் நிறுவப்பட்ட 24 தொலைத் தொடர்பு கோபுரங்களுக்கு மீளாய்வாண்டிற்காக அறவிட வேண்டிய ரூபா 72,000 தொகையான உரிமைக்கட்டண வருமானத்தை சபை இழக்க வேண்டி ஏற்பட்டது.

(ஆ) 1982 முதல் 2012 ஆம் ஆண்டு வரையான காலத்திற்கு நிலுவையாகக் காணப்பட்டு இன்று வரை அறவிடப்படாதுள்ள ரூபா. 537,386 தொகையான இறைச்சிக் கடைக் குத்தகைப் பணத்தை அறவிடுவதற்கு அல்லது ஏடுகளிலிருந்து பதிவழிப்பதற்கு 2014 ஒக்டோபர் 02 ஆந் திகதி வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

3. செயற்பாட்டு மீளாய்வு
----------------------------------

3.1 முகாமைத்துவச் செயற்திறனின்மை
---------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) 2008 ஆம் ஆண்டு தொடக்கம் 2012 ஆம் ஆண்டு இறுதி வரை ஒப்பந்தக்காரரிடமிருந்து அறவிடப்பட்ட பெறுமதி சேர்வரி ரூபா 1,261,703 தொகையை உள்நாட்டு இறைவரித் தணைக்களத்திற்கு அனுப்பிவைப்பதற்கு 2014 ஒக்டோபர் 02 ஆந் திகதி வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) இறைச்சிக் கடைகளை குத்தகைக்குப் பெற்ற மூன்று குத்தகைக்காரர்களிடமிருந்து பிணைப்பணமாக் ரூபா 460,699 பெறுமதியான 04 காசோலைகள் பெறப்பட்டு வங்கியில் வைப்புச்செய்யப்பட்டபின் வங்கியால் மறுக்கப்பப்பட்டன. இவ்வாறு மறுக்கப்பட்ட காசோலைகளுக்காக உரிய குத்தகைக்காரர்களிடமிருந்து பணத்தை அறவிடுவதற்கு அல்லது அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு 2014 ஒக்டோபர் 02 ஆந் திகதி வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) மாநகர சபையினால் மீளாய்வாண்டில் ஒரு மடி கணனி ரூபா 85,000 பெறுமதிக்கு கொள்வனவு செய்யப்பட்டு அலுவலக பாவனைக்காக பதவிநிலை உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டிருந்தது, 2014 ஏப்ரல் 30 ஆம் திகதி குறித்த உத்தியோகத்தர் இடமாற்றம் பெற்றுச் சென்றிருந்த போதிலும் அம்மடி கணனியை மீளப்பெற்றுகொள்ள 2014 ஒக்டோபர் 02 ஆம் திகதி வரை மாநகர சபையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) மீளாய்வாண்டிற்கான வரவு செலவுத்திட்டத்தில் அங்கீகரிக்கப்பட்ட 51 செலவின தலைப்புகளுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகைக்கு மேலதிகமாக ரூபா 7,796,594 கூட்டு மொத்த தொகைக்கு குறைநிரப்பு அங்கீகாரம் பெறப்படாது செலவிங்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

(உ) அலுவலங்கள் இருக்கும் இடங்களைக் குறித்துக் காட்டும் குறிகாட்டி பலகையானது தயாரிக்கப்பட்டு, பொருத்துவதற்காக மீளாய்வாண்டில் ரூபா 123,000 தொகை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த போதிலும். 2014 ஒக்டோபர் 02 ஆம் திகதிய கணக்காய்வுப்பில் குறித்த பலகையானது மாநகர சபையில் பெருத்தப்படாமை அவதானிக்கப்பட்டது.

3.2 சச்சரவுத் தன்மையான கொடுக்கல் வாங்கல்கள்

--------------------------------------------------------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) சிறுவர் பூங்கா வாகனத் தரிப்பிடம் மற்றும் கொல்களக் கட்டிடம் என்பவற்றை நிர்மாணிப்பது தெடர்பாக சாத்திய வள ஆய்வு அறிக்கையை பெற்றுக்கெள்வதற்கு தனியார் நிறுவனம் ஒன்றிற்கு மீளாய்வாண்டில் ரூபா 145,000 தொகை சபையின் அங்கீகாரமின்றி கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. எனினும் அந் நிறுவனத்திடமிருந்து குறித்த அறிக்கை 2014 ஒக்டோபர் 02 ஆந் திகதி வரை பெற்றுக்கெள்ளப்படவில்லை.

(ஆ) மீளாய்வாண்டில் மாநகர சபையின் நிதியின் கீழ் மடிகணனி பிறின்டர் மற்றும் ஸ்கேனர் ஆகியவை ரூபா 100,000 தொகைக்கு கொள்வனவு செய்யப்பட்டு கல்முனையிலுள்ள இளைஞர் கழகம் ஒன்றிற்கு வழங்கப்பட்டதாக கூறப்பட்ட போதிலும் குறித்த இளைஞர் கழகத்திற்கு மடிகணனி பிறன்டர் மற்றும் ஸ்கேனர் 2014 ஒக்டோபர் 02 ஆந் திகதி வரை ஒப்படைக்கப்பட்டிருக்கவில்லை.

4. கணக்களிபொறுப்பும் நல்லாளுகையும்.

4.1 உள்ளகக் கணக்காய்வு

ஓவ்வொரு உள்ளுராட்சி மன்றத்திலும் தமது ஆற்றலுக்கு ஏற்றவாறு உள்ளக கணக்காய்வு பிரிவு ஒன்றை உருவாக்கி கொள்ள வேண்டுமென மாகாண சபைகள் மற்றும் உள்ளுராட்சி அமைச்சின் 2005 நவம்பர் 08 ஆம் திகதிய 03 ஆம் இலக்க உள்ளுராட்சி மறுசீராமைப்புச் சுற்றறிக்கையின் 8 ஆம் பந்தியில் தெரிவிக்கப்பட்ட தற்கமைய சபையினால் 2014 ஒக்டோபர் 02 ஆந் திகதி வரை உள்ளக கணக்காய்வு பிரிவு ஏற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கீழ்வரும் கட்டுப்பாட்டு விடயங்கள் தொடர்பாக விசேடகவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) நிலையான சொத்துக் கட்டுப்பாடு

(இ) வருமானச் சேகரிப்பு